# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2049/22 - 2017 දෙසැම්බර් මස 13 වැනි බදාදා - 2017.12.13

*2049/22 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந்திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு கண்டி வடக்கு - பாததும்பர கூட்டிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் உடதலவின்ன சேவை நீர்த்தேக்கம், உட்பிரவேச வழி மற்றும் நீர் இறைக்கும் இயந்திரசாலை ஆகியவற்றை நிர்மாணிப்பதற்காக மாற்றீடான காணிப்பகுதியொன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக் காட்டப்பட்டுள்ள காணிப் பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2017, நவெம்பர் 29,
5/2/1/1332.

**அட்டவணை**

கண்டி மாவட்டத்தில், பாததும்பர பிரதேச செயலாளர் பிரிவில், உடதலவின்ன கிராம அலுவலர் பிரிவில் வெஹெரகல கிராமத்தில் அமைந்துள்ள வெஹெரகலவத்த என்றழைக்கப்படும் காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 34 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :-

வடக்கு : இக்காணியின் மீதமாயுள்ள பகுதி ;
கிழக்கு : உட்பிரவேச வழி (பிரதேச சபை வீதி) ;
தெற்கு : மஹ 2475 ஆரம்ப நிலவரைபடத்தின் துண்டிலக்கம் 61 ;
மேற்கு : இக்காணியின் மீதமாயுள்ள பகுதி.

காணிக்கு உரிமைகோருகின்றவர்களின் பெயரும் முகவரியும் : (1) திரு. திஸாநாயக முதியன்சேலாகே திஸாநாயக,
இலக்கம் 22,
வெஹெரகல,
உடதலவின்னை.

(2) மற்றும் மேலும் பலர்.

12-983

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு குண்டசாலை - ஹாரகம நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் நெல்லிகல சேவை நீர்த்தேக்கத்திற்கான உட்பிரவேச வழியை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2017, நவெம்பர் 29,*
*5/2/1/1319.*

**அட்டவணை**

*கண்டி மாவட்டத்தில், குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 652 - தெகல்தொருவ கிராம அலுவலர் பிரிவில் தெகல்தொருவ கிராமத்தில் அமைந்துள்ள (காணியின் பெயரை கண்டறிய முடியவில்லை) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரைவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 20 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :-*

| | | |
|---|---|---|
| வடக்கு | : | திருமதி எச். எம். சோமாவதி அவர்கள் உரிமை கோருகின்ற காணி மற்றும் திரு. சேனக பண்டார அவர்கள் உரிமை கோருகின்ற காணி ; |
| கிழக்கு | : | தெகல்தொருவ அரங்கல பொல்கஸ்வல வரை செல்லும் வீதி ; |
| தெற்கு | : | திரு. சுமேத குலசேகர அவர்கள் உரிமை கோருகின்ற காணி, திரு. ஜயரத்ன பண்டார அவர்கள் உரிமை கோருகின்ற காணி, திரு. எச். எம். ரணசிங்ஹ பண்டார அவர்கள் உரிமை கோருகின்ற காணி மற்றும் திரு. அமரசிங்ஹ அவர்கள் உரிமை கோருகின்ற காணி ; |
| மேற்கு | : | ஹிஜ்ஜஸ்பிடிய மற்றும் போதிகல பன்சலை வரை செல்லும் வீதி. |

*காணிக்கு உரிமைகோருகின்றவரின் பெயரும் முகவரியும் :* பிரதேச சபை - குண்டசாலை.
(தற்போது பயன்பாட்டிலுள்ள வீதியொன்றாகும்)

*12-984*

---

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு கலிகமுவ நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக மற்றும் மின் பிறப்பாக்கியை*

ஸ்தாபிப்பதன் பொருட்டும் காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2017, நவெம்பர் 29,
5/2/1/1318.

**அட்டவணை**

கண்டி மாவட்டத்தில், கலிகமுவ பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 76பி, ஹெலமட கிராம அலுவலர் பிரிவில் வரென்குரோவிவத்த ஹெலமட கிராமத்தில் அமைந்துள்ள கரதகொல்ல வத்த அல்லது ஹெலமட கொவிபல என்றழைக்கப்படும் காணியில் இருந்து அண்ணளவாக 16 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :-

வடக்கு : குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி மற்றும் மஹஓய ;
கிழக்கு : மஹஓய ;
தெற்கு : குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி மற்றும் வீதி ;
மேற்கு : குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி.

காணிக்கு உரிமைகோருகின்றவரின் பெயரும் முகவரியும் : (1) தேசிய பண்ணை விலங்குகள் அபிவிருத்திச் சபை,
த. பெ. இல. 1746,
இலக்கம் 40,
நாவலை வீதி, நாரஹேன்பிட்டிய, கொழும்பு 5.

12-985

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.